31st March 1964]

(எ) அதை அந்தக் கம்பெனி பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Nine companies.

(*b*) Yes.

(*c*) Yes.

(*d*) No. The vehicles are plying from September 1963.

திரு. மு. கருணாநிதி : இந்த டாக்சிகளுக்கு லைசென்ஸ் கொடுக்கிற வகையில், ஒரு கம்பெனிக்கு அதிகபட்சம் எத்தனை டாக்சிகளுக்கு லைசன்ஸ் வழங்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது நாம் வகுத்திருக்கிற கொள்கைப்படி எத்தனை கேட்டாலும் கொடுக்கிறோம்.

திரு. ஆ. துரையரசன் : இந்த தனியார் துறையில் ஓடுகின்ற டாக்சிகளை படிப்படியாகக் குறைத்துவிட்டு, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற டாக்சிகளை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி எண்ணம் இல்லை. கூட்டுறவுத்துறையில் அதிகமாக வந்தால், அவர்களுக்கும் வசதி அளிக்கவேண்டும் என்பதுதான் உத்தேசம்.

கோபாலபுரத்தில் காளைமாடு வதை

**470 கேள்வி—திரு. செ. சீனிவாசன் :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அரசியல் பிரச்சாரமாக சென்னை, கோபாலபுரத்தில் காளை மாட்டைக் கொம்பால் குத்தினர்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இக்குற்றம் செய்தவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

செகரடேரியட் அதிகாரி தற்காலிக நீக்கம்

**471 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க செகரடேரியட் அலுவலகத்தில் உயர்தர அதிகாரி எவரேனும் வேலையினின்று நீக்கிவைக்கப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அதற்குக் காரணமென்ன ?

(உ) அரசாங்கம் அவர்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

[31st March 1964

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes. An Assistant Secretary to Government has been placed under suspension since 3rd December 1963, for certain serious irregularities committed in a file.

(*c*) Orders have been issued reducing him to the post of Superintendent for a period of two years with effect from the date of suspension, i.e., 3rd December 1963 afternoon.

திரு. து. ப. அழகமுத்து: என்ன தவறு செய்தார் என்பதற்காக அவர் சஸ்பெண்டு செய்யப்பட்டார் என்பதை அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சில பைல்களிலே போகஸ் எண்டிரிகள் போட்டார் என்பதுதான். தவறுதலாக, இல்லாததை அவர் எழுதிவைத்தார் என்பதுதான் குற்றச்சாட்டு.

Unemployment problem

* 472 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to solve the problem of unemployment in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The attention of the Honourable Member is invited to the note "on steps to solve the unemployment problem during the Third Plan Period" already placed on the Table of the House on 31st October 1962.

Drinking water to Madras

* 473 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of the proposals under consideration for augmenting the supply of drinking water for Madras City?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சென்னை நகரத் தண்ணீர் சப்ளையை அதிகரிக்கும்பொருட்டு, அடியிற்கண்ட திட்டங்களை நிறைவேற்ற அரசினர் முடிவு செய்துள்ளனர்:—

(அ) பூண்டியிலிருந்து புழலேரிக்கு, திறந்த கால்வாய்த் திட்டம்.

(இ) புழலேரி, சோழவரம் ஏரி இவற்றின்கீழ் உள்ள ஆயக் கட்டு நிலங்களை ஆர்ஜிதம் செய்தல். அப்போதுதான், அந்த ஏரிகளின் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது நின்று, அவற்றின் தண்ணீர் முழுவதும் சென்னை நகர சப்ளைக்குக் கிடைக்கும்.

2. அடியிற்கண்ட திட்டங்களையும் அரசாங்கம் யோசித்து வருகிறது:—

(1) காவேரி, கிருஷ்ணா நதிகளிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, சென்னை நகரத்தின் தண்ணீர் சப்ளையை அதிகரித்தல்.